## இ) சுட்டெழுத்து (அ, இ, உ) (அவன், இவன், உன்)

ஒலித்துப் பழகுக = அவன், அது, அங்கு, அதில், அந்த, அதோ, அதை, அதன்,

ஒலித்துப் பழகுக = இவன், இது, இங்கு, இதில், இந்த, இதோ, இதை, இதன்,

ஒலித்துப் பழகுக = உன், உனது, உன்னை, உன்னோடு, உன்னால், உன்னிடம்,

தொடர்கள் ஆக்குக = மேலுள்ள சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை ஆக்குக.

எடுத்துக்காட்டு = அவன் படித்தான். அது மரம். அங்கு பார். அதில் உள்ளது எது, அந்த வீடு யாருடையது, அதோ பார், அதை எடு, அதன் உயரம் என்ன

மற்ற சுட்டுச் சொற்களைப் பயன்படுத்தித் தொடர்கள் ஆக்குக.

## ஈ) வினா எழுத்து (எ, ஏ, ஆ, ஓ, யா) எது, ஏது, அவனா, கண்ணோ, யார், எவ்வளவு, எத்தனை

எது உனது பை ?

இந்தக் கைபேசி உனக்கு ஏது ?

அவனா உன் நண்பன் ?

கண்ணோ பார்த்தது ?

யார் என்று சொல் ?

எ = எழுத்தில் தொடங்கும் மற்ற வினாச் சொற்கள் = எது, என்ன, எப்படி, எங்கு, எதில், எவ்வளவு, எத்தனை

ஏ = எழுத்தில் தொடங்கும் மற்ற வினாச் சொற்கள் = ஏது, ஏன், அதுவே,

ஆ = எழுத்தில் தொடங்கும் மற்ற வினாச் சொற்கள் = அவனா, அதுவா, அவையா, இவையா, மனிதனா, நானா, நீயா, அமுதனா,

ஓ = எழுத்தில் தொடங்கும் மற்ற வினாச் சொற்கள் = அதுவோ, இதுவோ, அவையோ, இவையோ, அதோ, அவனோ, நானோ, நீயோ, அமுதனோ

யா = எழுத்தில் தொடங்கும் மற்ற வினாச் சொற்கள் = யார், யாது, யாவர், யாவை,

தொடர்கள் ஆக்குக = மேலுள்ள சொற்களைப் பயன்படுத்தி வினாத் தொடர்களை ஆக்குக.

எடுத்துக்காட்டு = எது வீடு, என்ன சொல், எப்படி முடிவு, எங்கு சென்றாய், எதில் உள்ளது.

மற்ற வினாச் சொற்களைப் பயன்படுத்தித் தொடர்கள் ஆக்குக.

# குற்றியலுகரம் , முற்றியலுகரம் .

குற்றியலுகரம் (ஓசை குறைந்த உகரம் குற்றியலுகரம்) - 1/2 மாத்திரையாகக் குறைகிறது

முற்றியலுகரம் (ஓசை குறையாமல் முழுமையாக ஒலிப்பது) - 1 மாத்திரை ஒலிக்கும்.

பாடு - படு இரண்டு சொற்களையும் சொல்லிப் பாருங்கள்.

இரண்டு சொற்களிலும் டு எப்படி ஒலிக்கிறது என்று உணருங்கள்.

பாடு என்பதில் டு 1/2 மாத்திரையும், படு என்பதில் டு 1 மாத்திரையும் ஒலிப்பது தெரிகிறதா ?

எடுத்துக்காட்டு – ஒலித்துப் பார்க்கவும் - வேறுபாடு தெரிகிறதா ?

1) கேடு - கெடு , 2) ஆறு - அறு , 3) ஏது - எது , 4) வீசு - விசும்பு

**குற்றியலுகரம் (ஓசை குறைந்த உகரம்) - ஆறு வகைப்படும்**

## 1) வன்றொடர்க் குற்றியலுகரம்

எ-கா = பட்டு = சொல்லின் ஈற்றயலில் வல்லின ஒற்றெழுத்து ட் வந்ததுள்ளது.

(ஈற்றெழுத்து - டு, அதற்கு அடுத்த எழுத்து ட் - ட் என்பது வல்லின ஒற்றெழுத்து, இதை அடுத்து வந்துள்ள டு 1/2 மாத்திரை ஒலிக்கும்)

வல்லின ஒற்றெழுத்துகள் - க், ச், ட், த், ப், ற் - எடுத்துக்காட்டு - கொக்கு, தச்சு, பட்டு, பத்து, தப்பு, கற்று

## 2) மென்றொடர்க் குற்றியலுகரம்

எ-கா = அம்பு = சொல்லின் ஈற்றயலில் மெல்லின ஒற்றெழுத்து ம் வந்ததுள்ளது.

(ஈற்றெழுத்து - பு, அதற்கு அடுத்த எழுத்து ம் - ம் என்பது மெல்லின ஒற்றெழுத்து, இதை அடுத்து வந்துள்ள பு 1/2 மாத்திரை ஒலிக்கும்)

மெல்லின ஒற்றெழுத்துகள் - ங். ஞ், ண், ந், ம், ன் - எ-டு - மங்கு, பஞ்சு, தண்டு, பந்து, அம்பு, அன்பு

## 3) இடைத்தொடர்க் குற்றியலுகரம்

எ-கா = மார்பு = சொல்லின் ஈற்றயலில் மெல்லின ஒற்றெழுத்து ர் வந்ததுள்ளது

(ஈற்றெழுத்து - பு, அதற்கு அடுத்த எழுத்து ர் - ர் என்பது இடையின ஒற்றெழுத்து, இதை அடுத்து வந்துள்ள பு 1/2 மாத்திரை ஒலிக்கும்)

இடையின ஒற்றெழுத்துகள் - ய், ர், ல், வ், ழ், ள் - எ.கா - செய்து, சார்பு, செல்லு, கவ்வு, வாழ்வு, தள்ளு

4) நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

எ-கா = கோடு = சொல்லின் ஈற்றயலில் நெடில் எழுத்து கோ வந்ததுள்ளது)

(ஈற்றெழுத்து - டு, அதற்கு அடுத்த எழுத்து கோ - கோ என்பது தனியான நெடில் எழுத்து, இதை அடுத்து வந்துள்ள டு 1/2 மாத்திரை ஒலிக்கும்)

நெடில் எழுத்துகள் - ஆ, ஈ, ஊ, ஏ, ஓ - நா, வீ, கூ, பே, தோ - நாடு, வீடு, கூடு, பேசு, தோடு,

5) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

எ-கா = வரகு = சொல்லின் ஈற்றயலில் உயிர் எழுத்து அ வந்துள்ளது ( ர் + அ = ர ) அ வந்ததுள்ளது)

(ஈற்றெழுத்து - கு, அதற்கு அடுத்த எழுத்து அ - அ என்பது உயிரெழுத்து, இதை அடுத்து வந்துள்ள கு 1/2 மாத்திரை ஒலிக்கும்)

உயிரெழுத்து - அ - வரகு (ர=ர்+அ) - மிளகு (ள=ள்+அ) ..........

6) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

எ-கா = எஃகு = சொல்லின் ஈற்றயலில் ஆய்த எழுத்து ஃ வந்ததுள்ளது)

(ஈற்றெழுத்து - கு, அதற்கு அடுத்த எழுத்து ஃ - ஃ என்பது ஆய்த எழுத்து, இதை அடுத்து வந்துள்ள கு 1/2 மாத்திரை ஒலிக்கும்)

ஆயுத எழுத்து - ஃ - எஃகு - அஃது - இஃது -

---

**முற்றியலுகரம்** (ஓசை குறையாமல் முழுமையாக ஒலிப்பது) - 1 மாத்திரை ஒலிப்பு அப்படியே உள்ளது. பசு, படு, செலவு, கொலு - சொற்களின் இறுதியில் உள்ள உகரத்துக்கு முழு ஓசை உள்ளதை உணர முடிகிறதா ? சு, டு, வு, லு - என்கிற உகர வரிசைச் சொற்கள் முழுமையாக ஒரு மாத்திரை அளவு ஒலிக்கின்றன. எனவே இவை ஒவ்வொன்றும் முற்றியலுகரம்.

சுட்டெழுத்து, வினா எழுத்து, குற்றியலுகரம், முற்றியலுகரம், என்கிற நான்கு வகையான எழுத்துகளை அறிந்து கொள்வதின் நோக்கமே, அவை எப்படி ஒலிக்கின்றன என்று அறிந்து கொண்டு, நாம் பேசும்பொழுது அந்த எழுத்துகளைச் சரியாக ஒலிக்க வேண்டும் என்பதற்காகவே. ஒவ்வொரு எழுத்துக்கும் எத்தனை மாத்திரை ஒலிக்க வேண்டும் என்பது தெரிந்தால் ஒலிப்பு முறை சரியாக இருக்கும். சரியான ஒலிப்பே சரியான எழுதுமுறைக்கு அடித்தளமாக அமையும்.

# தமிழ் எழுத்துகள்.

**நினைவில் நிறுத்துக**

உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள், ஆய்த எழுத்து என்று நான்கு வகைப்படும்.

உயிரெழுத்து 12, மெய்யெழுத்து 18, உயிர்மெய் எழுத்து 216, ஆய்த எழுத்து 1.

எனத் தமிழ் எழுத்துகள் மொத்தம் = **12 + 18 + 216 + 1 = 247** எழுத்துகள் என்று நினைவில் நிறுத்துவோம்.

1) **உயிரெழுத்துகள்** (12) இரண்டு வகைப்படும்.

அ) குறில் (5) (அ, இ, உ, எ, ஒ) - ஆ) நெடில் (7) (ஆ, ஈ, ஊ, ஐ, ஏ, ஓ, ஔ)

2) **மெய்யெழுத்துகள்** (18) மூன்று வகைப்படும்.

அ) வல்லினம் (க், ச், ட், த், ப், ற்) ஆ) மெல்லினம் (ங். ஞ், ண், ந், ம், ன்) இ) இடையினம் (ய், ர், ல், வ், ழ், ள்)

3) **உயிர்மெய் எழுத்துகள்** (216)

**அ வரிசை உயிர்மெய் எழுத்துகள் = 18,**

**உ, ஊ வரிசை உயிர்மெய் எழுத்துகள் = 36,**

**ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ வரிசை உயிர்மெய் எழுத்துகள் 9 குறியீடுகளில் = 162,**

**ஆக உயிர்மெய் எழுத்துகள் மொத்தம் = 216**

4) **ஆய்த எழுத்து** (1) ஃ

---

தமிழ் எழுத்துகளை எளிமையாக நினைவில் வைத்துக் கொள்வதற்காக இவை வரிசைப்படுத்தப்பட்டுள்ள அமைப்பைக் காணும்போது நமக்கு வியப்பூட்டுவதாக உள்ளது. உலகமொழிகள் எவற்றிலும் இப்படி இல்லை உயிரெழுத்துகள் ஒரு குறில், ஒரு நெடில் என்று இசைவாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மெய்யெழுத்துகள் க முதல் ன வரை வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை நினைவில் வைப்பது சிரமமானது. ஆனால் அவற்றை கசடதபற, யரலவழள, ஙஞணநமன என்று வரிசைப்படுத்தினால் எளிமையாக நினைவில் நிறுத்தலாம். க முதல் ன வரை எதன் அடிப்படையில் இப்படி வரிசைப்படுத்தப் பட்டுள்ளன என்று கூர்ந்து நோக்கியபோது, தமிழரின் மொழி அறிவும், இசை அறிவும் கண்முன் தோன்றி வியப்படைய வைத்தது.




**க முதல் ன வரையுள்ள எழுத்துகள் எப்படி இசைவாக அடுக்கப்பட்டுள்ளன என்பதை இப்படம் காட்டுகிறதல்லவா?**

# எழுத்துகளைச் சரியாக உள்வாங்காமையால் ஏற்படும்பிழைகள்

**பிழை எண் 1**

**எந்த எழுத்து எங்கு வரும் என்று தெரியாததால் வரும் பிழை.**

உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்த எழுத்து ஆகிய எழுத்துகள் சொல்லில் எங்கு வரும் என்ற விளக்கத்தை அறியவும். இந்த விதியை மீறிய வகையில் எழுத்துகள் சொற்களில் இருந்தால் அவை பிழையான சொற்கள் என்று அறியலாம். பிழை அறிந்து, தவிர்க்க முயற்சி செய்யவும்

**பிழை எண் 2**

**எழுத்துகளை ஒலிப்பது பிழையானால் எழுதுவதும் பிழையாகும்.**

ர, ற இரண்டு எழுத்துகளும் - ந, ன, ண மூன்று எழுத்துகளும் - ல, ள, ழ மூன்று எழுத்துகளும் சரியாக ஒலிக்கப்பட வேண்டும். பிழையாக ஒலித்தால் எழுதுபவரும் பிழையாகவே எழுதுவார்கள்

**மரம், மறம் - நிறம், நிரம் - வருவல், வறுவல்**

இரண்டு சொற்களிலும் எழுத்துகள் வேறுபட்டாலும், இரண்டின் ஒலிப்பும் ஒன்றுபோலவே ஒலிப்பதால் இவை மயங்கொலிச் சொற்கள் என அழைக்கப்படுகின்றன. மயங்கெலிச் சொற்களால் வரும் **பிழைகள் மிகவும் அதிகம்.** எனவே **சொற்களில் உள்ள எழுத்துகளையும் சொல்லின் பொருளையும் நெஞ்சில் நிறுத்திப் பிழைகளைத் தவிர்க்க முயற்சி செய்யவும்.**

**பிழை எண் 3**

**குறில் நெடில் வேறுபாடு தெரியாமல் எழுத்துகளை ஒலிப்பதில் ஏற்படுகிற பிழை.**

குறிலை நெடிலாகவும், நெடிலை குறிலாகவும் ஒலித்துப் பழகினால், எழுத்துகளை எழுதும் பொழுது பிழை வரும். எ, ஏ – கெ, கே – ஒ, ஓ – கொ, கோ – வரிசை எழுத்துகளை எழுதும் பொழுது மாணவர்கள் அதிகமாகப் பிழை செய்கிறார்கள். எனவே குறில் நெடில் எழுத்துகளைச் சரியாக ஒலித்துப் பழவும். குறில் நெடில் எழுத்துகளை எப்படி எழுதுவது என்பதையும் உள்வாங்கவும்

இத்துடன் எழுத்து தொடர்பான கருத்துருக்கள் நிறைவடைகின்றன. விடுபட்ட கருத்துருக்கள் இருந்தால் அருள்கூர்ந்து இணைத்துக் கொள்ளவும். எழுத்துதொடர்பாக எழும் பிழைகளை வரிசைப்படுத்தி விடுபட்டவை இருந்தால் அவற்றையும் இணைத்துக் கொள்ளவும். பிழைகளை நீக்கி எழுதவும் பேசவும் பயிற்சி எடுக்கவும்